මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இலக்கம் : PE/2024/35** **2024.10.22**

# பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14

## 2023 இல 03 தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் (2024) போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் 2023 இல 03 எனும் தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றியொழுகுதல் வேண்டும். அதற்கிணங்க, போட்டியிடும் ஒவ்வொரு அரசியல் கட்சி / சுயேச்சைக்குழு / வேட்பாளர்களினால் தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு செலவிட முடியுமான அதிகபட்ச செலவு எல்லைகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களினது தலைவர்களின் முன்மொழிவுகளைப் பெற்று தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டு அந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வேட்பாளர் சார்பாக பெறப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் அத்துடன் அத்தகைய நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் பொருளாகவிருப்பின் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியும், குறித்த உதவுதொகைகள் கொடை, கடன், முற்பணம் அல்லது வைப்பு என்ற வகையாக அன்பளிப்புச் செய்யப்பட்டதா என்பது தொடர்பிலும் அத்தோடு பிரச்சார நடவடிக்கைகளுக்கு செலவுசெய்யப்பட்ட முறை, தேர்தல் பிரச்சார செலவின மற்றும் வருமான விபரத்திரட்டில் உள்ளடக்குதல் வேண்டும். அந்த விபரத்திரட்டுக்கள் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு 21 (இருபத்தொரு) நாட்களுக்குள் ஏற்புடையவாறு கட்சிச் செயலாளரின், சுயேச்சைக் குழுத் தலைவரின் மற்றும் வேட்பாளரின் கையொப்பத்துடன் சத்தியப்பிரமாண ஆணையாளரினால் அல்லது சமாதான நீதவான் மூலம் அத்தாட்சிப்படுத்தி அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக பெயர்குறித்த நியமனங்களை ஒப்படைத்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்திலும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு அந்தந்த மாவட்ட செயலகங்களிலும் சட்டம் பற்றிய தெளிவூட்டல் வழங்கப்பட்டு அதற்கு ஏற்புடைய தகவல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் படிவங்கள் அங்கீகரிக்கப்பட்ட பெயர்குறித்த நியமனங்களை சமர்ப்பித்துள்ள அனைத்து அரசியல் கட்சிகளினதும் அதிகாரம்பெற்ற முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு தற்போது கையளிக்கப்பட்டுள்ளன.

ஆகவே, 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தை நன்றாக ஆய்வுசெய்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக முக்கியம் என்பது தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து தரப்பினருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க**
**தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு**
**(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)**